வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 26.04.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் உடல் இன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அரசு துறைகள் மற்றும் அமைப்புகளில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரம் இளைஞர்களுக்கு காணொளி காட்சி மூலம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மும்பையில் நடைபெற்ற இந்திய ஆடியோ உச்சி மாநாட்டில் ஆகாஷ்வாணி பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 6 விருதுகளை வென்றுள்ளது.

புதுச்சேரியில் மாநில அளவிலான தடகள விளையாட்டு போட்டி, இன்று கோரிமேடு காவலர் விளையாட்டு மைதானத்தில் துவங்கியது.

போப் இறுதி சடங்கு 1 (16)

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் கடந்த 21 ஆம் தேதி திங்கட்கிழமை காலமானார். அவரது இறுதி சடங்கில் பங்கேற்பதற்காக பல்வேறு நாடுகளை சேர்ந்த தலைவர்கள், பிரதமர்கள், மதத்தலைவர்கள் வாடிகன் நகருக்கு சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மத்திய அரசு மற்றும் இந்திய மக்கள் சார்பாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, போப் பிரான்சிசின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்றார். இதேபோல், அமெரிக்க ஜனாதிபதி திரு டொனாலட் டிரம்ப், பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரான், பிரேசில் அதிபர் திரு லூயிஸ் இன்சியோ லூலா டா சில்வா, மற்றும் அர்ஜெண்டினா அதிபர் திரு ஜோவியர் மிலே ஆகியோரும் போப் பிரான்சிசின் இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இதனிடையே, போப் பிரான்சிசின் உடலுக்கு இந்திய மக்கள் சார்பில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு அஞ்சலி செலுத்தி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தமது எக்ஸ் வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார். சமூகத்திற்கு போப் பிரான்சிஸ் ஆற்றியுள்ள பணிகளை உலகம் என்றென்றும் நினைவில் கொள்ளும் என்றும் அவர் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

போப் இறுதி சடங்கு 2 (12)

போப் பிரான்சிசின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் இதுவரை இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அஞ்சலி செலுத்தி இருப்பதாக வாடிகன் நிர்வாகம் தெரிவித்துள்ளது. போப் பிரான்சிசின் இறுதி ஊர்வலத்திற்கு பின்னர் இறுதி சடங்குகள் நிறைவேற்றப்பட்டு, அவரது உடல் புனித மேரி தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த போப் பிரான்சிசுக்கு புதுச்சேரியில் உள்ள புனித ஜென்மராகினி பேராலயத்தில் இரங்கல் திருப்பலி நடத்தப்பட்டு, அவரது திரு உருவ படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில், புதுச்சேரி-கடலூர் மறைமாவட்ட பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் தலைமையில் நடைபெற்றது. இதில் புதுச்சேரியில் உள்ள பல்வேறு தேவாலயங்களை சேர்ந்த பங்கு தந்தையர், குருக்கள், துறவியர்கள், கலந்து கொண்டு மறைந்த போப் பிராசிஸ் திருஉருவ படத்திறகு மலரஞ்சலி செலுத்தினர்.

மோடி வேலைவாய்ப்பு திருவிழா 1 (17)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அரசு துறைகள் மற்றும் அமைப்புகளின் புதியதாக தேர்ந்தெடுக்கப் பட்ட 51 ஆயிரம் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை காணொளி காட்சி மூலம் வழங்கினார். வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், 15 ஆவது வேலை வாய்ப்புத் திருவிழா இன்று நாடு முழுவதும் 47 இடங்களில் நடைபெற்றது. இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல், மற்றும் தேசிய வளர்ச்சிக்கு திறம்பட பங்களிக்கும் வாய்ப்புகளை இந்த வேலை வாய்ப்பு முகாம் வழங்குகிறது. இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், குடிமைப்பணி தேர்வில் முதல் 5 இடங்களில் 3 பெண்கள் தேர்ச்சி பெற்று இருப்பது பெருமைக்குரிய விஷயம் என்று தெரிவித்தார். இன்றைய இளைஞர்கள் தங்கள் கடின உழைப்பு மற்றும் புதுமைகளால் தேசம் எவ்வளவு ஆற்றலை கொண்டுள்ளது என்பதை உலகிற்கு காட்டுகிறார்கள் என்றும் கூறினார். இன்று பணி நியமன கடிதங்களை பெற்ற இளைஞர்கள் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், உள்நாட்டு பாதுகாப்பு, நவீன உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கையில் மாற்றங்களை கொண்டு வருதல் போன்ற பணிகளை மேற்கொள்வார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மோடி வேலைவாய்ப்பு திருவிழா 2 (18)

இன்னும் சில நாட்களில் மும்பையில் உலக ஆடியோ விஷீவல் மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாடு நடைபெற உள்ளது என்றும் அவர் கூறினார். இந்நிகழ்ச்சியின் அடித்தளமாக இளைஞர்கள் உள்ளனர் என்றும், அவர்கள் நாட்டின் இளம் படைப்பாளிகள், முதல் முறையாக அவர்கள் இது போன்ற தளத்தை பெறுகிறார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார். கிராமப்புற பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாகவும் பிரதமர் கூறினார். இதேபோல், மத்திய அரசின் ரோஜ்கர் மேளா திட்டத்தின் கீழ், சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர்களுக்கு மத்திய அமைச்சர்கள் துர்காதாஸ் உயிகே, டாக்டர் பொம்மசனி சந்திரசேகர், மற்றும் டாக்டர் ஜூவல் ஆரம் ஆகியோர் பணி நியமன ஆணைகளை வழங்கி பேசினர். புதுடெல்லியில் நடைபெற்ற வேலை வாய்ப்புத் திருவிழா நிகழ்ச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கினார். இளைஞர்கள் நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் பணியில் ஈடுபட வேண்டும் என்றும், அவர்களுக்கு பணியின் போது பல சவால்கள் உள்ளன என்றும் தெரிவித்தார்.

*மன் கீ பாத் (7)*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் மனதின் குரல் நிகழ்ச்சி ஆகாஷ்வாணியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இது மனதின் குரல் நிகழ்ச்சியின் 121 ஆவது அத்தியாயம் ஆகும். இந்த நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியின் அனைத்து அலைவரிசைகளிலும், ஏஐஆர் செய்தி வலைதளம், மற்றும் நியூஸ்-ஆன்-ஏர் மொபைல் செயலி ஆகியவற்றிலும் ஒலிபரப்பாக உள்ளது. பிரதமரின் இந்நிகழ்ச்சியை தொடர்ந்து இதன் தமிழாக்கம் ஒலிபரப்பாக உள்ளது.

*இந்திய ஆடியோ உச்சி மாநாடு* (15)

மும்பையில் நேற்றிரவு நடைபெற்ற இந்திய ஆடியோ உச்சி மாநாட்டில் ஆகாஷ்வாணி பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 6 விருதுகளை வென்றுள்ளது. இதில் முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி ஸ்மிருதி இராணியின், **நை சோச் நை கஹானி -ஸ்மிருதி இராணியுடன் ஒரு வானொலி பயணம்** என்ற நிகழ்ச்சி, வானொலியில் இந்த ஆண்டின் சிறந்த தொடராக தேர்ந்தெடுக்கப்பட்டது. 13 அத்தியாங்களை கொண்ட இந்த தொடர் பெண்களின் மன உறுதி மற்றும் நம்ப முடியாத கதைகளை கொண்டதாகும். இந்த தொடர் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முடனான நேர்காணலுடன் முடிவடைந்தது. நிகழ்ச்சியில், ஆகாஷ்வாணியின் இயக்குநர் ஜெனரல் டாக்டர் பிரக்யா பாலிவார் கவுர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அப்போது பேசிய அவர், ஆடியோ துறையில் ஏற்பட்டுள்ள புரட்சியையும், இந்தியாவின் பொது சேவை ஒலிபரப்பாளராக ஆகாஷ்வாணி நாட்டு மக்களின் ஆர்வத்தை நிலை நிறுத்துவதன் மூலம், தகவல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு என்ற தனது நோக்கத்திற்கு எவ்வாறு உறுதி பூண்டுள்ளது என்பதையும் எடுத்துரைத்தார்.

பியூஷ் கோயல் (15)

அமர்நாத் யாத்திரை இந்த ஆண்டும் திட்டமிட்டபடி நடைபெறும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் செய்தியாளர்களிடம பேசிய அவர், ஏற்கனவே திட்டமிட்டபடி வரும் ஜூலை மாதம் அமர்நாத் யாத்திரை தொடங்கும் என்றும், பாகிஸ்தான் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தால் யாத்திரையில் பாதிப்பு ஏதும் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார். காஷ்மீரில் சுற்றுலா துறை விரைவில் மீண்டும் வழக்கம் போல் செயல்பட தொடங்கும் என்றும் அவர் தெரிவித்தார். வளர்ச்சிப் பாதையில் இருந்து காஷ்மீரை யாரும் திசை திருப்ப முடியாது என்றும் அவர் கூறினார். இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்கள் நிர்ணயிக்கப் பட்ட தேதிக்குள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பாகிஸ்தானுக்கு செல்லும் சிந்து நதி நீரை நிறுத்தியது தொடர்பாகவும், அதனை இந்தியாவிற்குள் மடை மாற்றம் செய்வது தொடர்பாகவும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆலோசிக்கப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுச்சேரி தடகளம் (12)

புதுச்சேரி அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நல இயக்குநரகம் சார்பில் மாநில அளவில், பள்ளி மாணவர்களுக்கு இடையிலான தடகள விளையாட்டு போட்டிகள் இன்று முதல் 2 நாட்கள் நடைபெறுகிறது. புதுச்சேரி கோரிமேடு காவலர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந்த போட்டியில், புதுவை பிராந்தியத்தின் 4 பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளை சேர்ந்த 650 மாணவ- மாணவியர் பங்கேற்றுள்ளனர். இன்று நடைபெற்ற போட்டிகளில் பல்வேறு தடகள விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. போட்டிகள் நாளை மாலை வரை நடைபெற உள்ளது. போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி, அமைச்சர் திரு நமச்சிவாயம் ஆகியோர் பரிசுகளை வழங்க உள்ளனர். இதுகுறித்து புதுச்சேரி இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு துறையின் திட்ட அதிகாரி திரு சுப்பிரமணியன் கூறுகையில்......

(வாய்ஸ் )

ஹைப்பர் சோனிக் (13)

இந்தியாவின் அடுத்த தலைமுறை ஹைப்பர் சோனிக் ஏவுகணை அமைப்பிற்கான ஸ்க்ராம்ஜெட் இன்ஜின் தரை சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐதராபாத்தில் உள்ள பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகத்தில் இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் ஆயிரம் வினாடிகளுக்கு மேல் ஸ்க்ராம்ஜெட் இன்ஜின் தரை சோதனை மூலம் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டு புதிய மைல் கல் சாதனை நிகழ்த்தப்பட்டது. ஹைப்பர் சோதனை குருஸ் ஏவுகணை என்பது ஒலியின் வேகத்தை விட 5 மடங்கு அதிகமாக பயணிக்க கூடிய ஒருவகை ஆயுதமாகும். இது காற்று சுவாச இயக்கத்தால் இயக்கப்படுகிறது. இந்த சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப் பட்டதற்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த சோதனை தேசத்தின் முக்கியமான ஹைப்பர் சோனிக் ஆயுத சோதனை தொழில்நுட்பத்தின் பிரதிபலிப்பு என்று அவர் பாராட்டினார்.

உலக வங்கி (11)

இந்தியாவில் வேலை வாய்ப்புகள் வேகமாக அதிகரித்து வருவதாக உலக வங்கி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் இருந்து இந்தியாவில் வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துள்ளதாகவும், இது, இந்தியாவின் உழைக்கும் வயதினை காட்டிலும், கூடுதலாக உள்ளது என்றும் உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதிகரித்து வரும் வேலை வாய்ப்புகளில் பெண்களின் பங்கு குறிப்பிடத் தக்க அளவில் அதிகரித்துள்ளது என்றும், அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. நகரப் பகுதிகளில் வசிக்கும் ஆண்கள், மற்றும் பெண்களின் மத்தியில் சிறு தொழில் தொடங்குபவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்து வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் உடல் இன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அரசு துறைகள் மற்றும் அமைப்புகளில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரம் இளைஞர்களுக்கு காணொளி காட்சி மூலம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மும்பையில் நடைபெற்ற இந்திய ஆடியோ உச்சி மாநாட்டில் ஆகாஷ்வாணி பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 6 விருதுகளை வென்றுள்ளது.

புதுச்சேரியில் மாநில அளவிலான தடகள விளையாட்டு போட்டி, இன்று கோரிமேடு காவலர் விளையாட்டு மைதானத்தில் துவங்கியது.